**தொம்பே பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 02 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 16 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தொம்பே பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கை

நிலையான சொத்துக்களை கணக்கு வைப்பதற்குரிய கணக்கீட்டுக் கொள்கை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. நிலையான சொத்தொன்றிற்கான கணக்கு வைக்கப்பட வேண்டிய ஆகக்குறைந்த பெறுமதி, சொத்தின் தன்மை மற்றும் ஆயுட்காலம் என்பவற்றின் பிரகாரம் அதனை நிலையொன்றாக இனங்காணாமையால் மிகவும் குறைந்த பெறுமதியுடைய மற்றும் மீண்டும் விற்பனை செய்து பணமாக்க முடியாத குறுகிய ஆயுட்காலத்துடன் உள்ள விடயங்கள் நிலையான சொத்துக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 101,450 பெறுமதியான 03 இரும்பு அலுமாரிகள், 02 கணனி பிறின்டர்கள் மற்றும் 06 கணனி துணைப்பாகங்கள் என்பன கணக்குகளுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் சபையினால் பெறப்பட்டிருந்த ரூபா 161,400 பெறுமதியான 06 தண்ணீர் தேக்கி வைக்கும் தாங்கிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) தொம்பே உப அலுவலகத்தின் பொழிப்புக் காசேடு (பி.ச.5) இன் பிரகாரம் கையில் உள்ள மீதி ரூபா 21,877 ஆக இருந்த போதிலும் அது கணக்குகளில் 25 சதமாக காட்டப்பட்டமையினால் காசுக் கணக்கு மீதி ரூபா 21,877 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மின் பிறப்பாக்கி ஒன்றை கொள்வனவு செய்வதற்காக பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட ரூபா 3,200,000 தொகை குறித்த கடன் கொடுத்தோர் இனங்காணப்படாமல்

கடன்கொடுத்தோர் கணக்கில் உள்ளடக்கப்பட்டு ஆண்டின் செலவினமாக வருமானச் செலவினக் கணக்கில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(உ) 15 குப்பை வண்டிகள், 03 வில்பரோ மற்றும் 1 லுமாலா சைக்கிள் என்பவற்றின் பெறுமதி அதிகரித்துக் காண்பிக்கப்பட்டமையால் மோட்டார் வாகனமும் வண்டியும் கணக்கு ரூபா 146,482 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மெய்மையாய்வு அறிக்கையில் உள்ள ரூபா 11,414,068 பெறுமதியான சொத்துக்கள் 2017 ஆம் ஆண்டின் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(எ) பிரதான அலுவலகத்தின் கட்டிடத்தில் காணப்பட்ட (பழைய) 423 கல்வனைஸ் குழாய்கள் கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிலுவை ஆதனவரி ரூபா 1,201,451 ஆக இருந்த போதிலும் பட்டோலைகளின் பிரகாரம் அது ரூபா 1,441,129 ஆனமையால் ரூபா 239,678 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 142,388,155 கூட்டுத்தொகையான 3 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவு | - | சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய சகல வீதிகளினதும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு பெயர்ப் பதிவேடு வர்த்தமானி மூலம் பிரசுரித்து சபையின் உரித்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. வருடாவருடம் பூர்த்தி செய்யப்பட்ட சகல வீதிகளும் அந்தப் பதிவேட்டில் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 193 | - | ஒவ்வொரு வருமான விடயத்தின் கீழ்வரும் மிகை அல்லது பற்றாக்குறை மற்றும் ஒவ்வொரு செலவின விடயத்தின் கீழ் வரும் மிகை அல்லது சேமிப்பு |

| | | | |
|---|---|---|---|
| | | | தொடர்பான விடயங்களை விளக்குகின்ற கூற்று ஒன்று ஒவ்வொரு வருட இறுதியிலும் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் நிதிப்பிரமாணம் 371 | 150,556 | செயல் நிமித்த முற்பணம் குறித்த பணி நிறைவு பெற்றதும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 1995 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் 2 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட முற்பணம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.3.6 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

நிலுவை ஆதனவரியான ரூபா 163,313 தொகை ஒன்று திரண்ட நிதியத்தில் பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக உள்ளூராட்சி அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டு வரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 47,974,046 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 54,646,630 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

(அ) 202-1-001-8-4641360 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கில் ஆண்டின் ஆரம்பம் முதல் தொடர்ச்சியான ரூபா 20 மில்லியனுக்கு மேற்பட்ட மிகை காசு மீதி ஒன்று காணப்பட்டதுடன் இந்தப் பணத்தை பொருளாதார நபர்களைப் பெறும் வகையில் பொருத்தமான முதலீடுகளில் ஈடுபடுத்துவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் நிதியம் பிரதேசத்தில் மக்களுக்கு ஆகக்கூடிய நலன்களைப் பெறக்கூடிய வகையில் திட்டமிடப்பட்டு செலவு செய்தல் சபையின் நோக்கமாக இருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான பணம் ரூபா 147.17 மில்லியன் 08 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| வீதவரியும் வரியும் | 5,826,661 | 6,385,571 | 6,232,235 | 1,201,451 | 5,957,289 | 6,052,053 | 7,035,074 | 1,607,024 |
| வாடகை | 10,752,705 | 10,752,704 | 10,819,858 | 61,350 | 7,880,395 | 10,729,109 | 8,031,793 | 128,504 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,129,000 | 1,029,000 | 919,000 | - | 1,278,188 | 1,638,912 | 1,291,009 | - |
| ஏனைய வருமானம் | 167,301,715 | 167,301,715 | 167,038,988 | - | 197,254,488 | 156,795,699 | 266,538,576 | - |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

முன்னைய ஆண்டின் உள்ளபடியான வருமானம் ரூபா 282.8 மில்லியனுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் உள்ளபடியான வருமானம் ரூபா 185 மில்லியன் வரை ரூபா 97.8 மில்லியனால் குறிப்பிட்டுக் கூறக்கூடிய வகையில் குறைவடைந்திருந்தது. இந்தக் குறைவிற்கு ஏனைய வருமானத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முத்திரை வருமானம் மற்றும் கைத்தொழில் பெறுவனவுகளின் குறைவே பிரமான காரணமாக இருந்தது.

### 2.3.3 வீதவரியும் வரியும்

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,441,129 தொகையை நிலுவை ஆதனவரி மீதியில் கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் 05 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரை ரூபா 248,602 தொகையும் 10 வருடங்களுக்கு மேல் ரூபா 366,551 தொகையும் உள்ளடங்கி இருந்ததுடன் இந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| உப அலுவலகம் | 1 ஆண்டிற்கு குறைவு | 1-3- வருடங்கள் வரை | 3-5 வருடங்கள் வரை | 5-10 வருடங்கள் வரை | 10 வருடங்களுக்கு மேல் | மொத்த நிலுவை வருமானம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | % |
| வேகே | 106 ,564 | 49,747 | 69,816 | 48,627 | 9,949 | 284,703 | 19.7 |
| தொம்பே | 58,895 | 43,396 | 10,752 | 62,066 | 107,233 | 282,342 | 19.5 |
| கேறகல | 17,219 | 17,406 | 8,410 | 6,363 | 13,842 | 63,240 | 4.3 |
| பூகொட | 93,700 | 274,403 | 78,668 | 131,546 | 235,527 | 813,844 | 56.3 |
| | 276,378 | 384,952 | 167,646 | 248,602 | 366,551 | 1,444,129 | |

(ஆ) இறுதித் தடவையாக ஆதனவரி மதிப்பீடு 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நான்கு உப அலுவலகங்களிலும் 2017 ஆம் ஆண்டின் ஆதனவரி 2008 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் அறவிடப்பட்டமையால் வருடாந்த ஆதனவரி வருமானம் கீழ் மட்டத்தில் காணப்பட்டது.

(இ) வறுமையின் அடிப்படையில் ஆதனவரி அலகுகளாக வேகே உப அலுவலகத்தில் 250 ஆகவும், தொம்பே அலுவலகத்தில் 05 ஆகவும் இருந்ததுடன் வறுமையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆதனவரி விடுவிப்புக்களின் போது சரியான திட்ட முறைமை ஒன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கிரிந்திவெல வலயக்கல்வி அலுவலகத்தின் நிலுவை ஆதனவரி 05 வருடங்களுக்கு குறைவான ரூபா 63,588 தொகை, 5 தொடக்கம் 10 வருடங்களுக்கிடையே ரூபா 67,847 தொகை மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 12,633 தொகையாக

கூட்டுப் பெறுமதி ரூபா 144,068 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

(அ) செல்லுபடிக்காலம் 03 வருடங்களான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் காலாவதியாவதற்கு மூன்று மாங்களுக்கு முன்னர் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்காக விண்ணப்பிக்க வேண்டிய போதிலும் 09 நிறுவனங்கள் 2018 மார்ச் 16 ஆந் திகதி வரையிலும் சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்திருக்கவில்லை.

(ஆ) 03 நிறுவனங்கள் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் கைத்தொழில்களை நடாத்திச் செல்கின்றது.

(இ) சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கும் போது சபையினால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகள் பின்பற்றப்பட்டு இருந்தனவா என்பது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 ஏனைய வருமானம்**

**தொலைபேசிக் கோபுரங்கள்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற தொலைபேசிக் கோபுரங்கள் தொடர்பாக மெய்மையாய்வை மேற்கொண்டு 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு உப விதி ஒன்று அங்கீகரித்து வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் இரண்டு கோபுரங்களிலிருந்து மாத்திரம் ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது.

**2.3.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 07 மில்லியன் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 40 மில்லியன் ஆகவும் இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

பிரதேசசபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 18 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உபவிதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 15 விடயங்களுக்கு மாத்திரமே உப விதி விதிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

விதிக்கப்பட்டிருந்த உப விதியின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த 18 இலக்குகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலக்குகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 1,809,465 கிரயமான கேரகல புதிய ஆயுர்வேதக் கட்டிட நிர்மாணத்திற்கு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 706,815 தொகை செலவில் மதிப்பீட்டின் 40 சதவீத அளவு மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

**(ஈ) கைவிடப்பட்ட பணிகள்**

மீளாய்வாண்டில் 1,000 கி.மீ அபிவிருத்தி செய்யும் மூலதன நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற 11 செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்தன.

**(உ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 18,312,036 தொகை செலவிடப்பட்டிருந்தது. அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) 2008 யூலை 30 ஆந் திகதிய 1560/06 ஆம் இலக்க வர்த்தமானியின் 18(1) இன் பிரகாரம் வருடாந்த கழிவுப்பொருள் சேகரித்தல் செலவினங்களை ஈடுசெய்து கொள்வதற்காக பாதீட்டில் கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சுகாதார பாதுகாப்பு முறைமை தொடர்பான மேற்பார்வைக் குழு 2018 மார்ச் 16 ஆந் திகதி வரையிலும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) சுற்றாடல் பிரச்சினைகள்**

சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது சபைக்கு 148 பொதுமக்களின் முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் பொதுமக்கள் முறைப்பாட்டுப் பதிவேட்டில் முறைப்பாடுகள் கிடைத்த திகதி முதல் அதன் இறுதி வரையிலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காண்பிக்கப்படாமல் உரிய முறைப்பாடுகள் யாருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பது மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது 50 பொதுமக்கள் முறைப்பாடுகள் அளவில் தீர்வு வழங்கப்பட்டிருக்கவில்லை.

**(எ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 யூன் 22 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான விபரம் பின்வருமாறு

| தரம் | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடமான ஊழியர் எண்ணிக்கை | மிகை ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 04 | 04 | - | - |
| மூன்றாம் நிலை | 01 | 01 | - | - |
| இரண்டாம் நிலை | 60 | 53 | 07 | 01 |
| ஆரம்ப நிலை | 134 | 124 | 10 | - |
| மொத்தம் | 199 | 182 | 17 | 01 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையில் 06 நூலகர் பதவிகள் 15 வருடங்கள் முதல் வெற்றிடங்களாகக் காணப்பட்டன.

(ஆ) 2014 திசெம்பர் 19 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 25/2014 இன் பிரகாரம் ஆரம்ப தொகுதியில் 07 சுகாதாரத் தொழிலாளர், 06 களத் தொழிலாளர்கள், 04 காவலர்கள் மற்றும் 01 முன்பள்ளி பாடசாலை ஆசிரியர் என 18 பேர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கை சமர்ப்பித்து அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1975 இன் 1 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்தும் சட்டம் மற்றும் 1988 இன் 74 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளியிடும் (திருத்தப்பட்ட) சட்டத்தின் பிரகாரம் சபையின் பதவி நிலை உத்தியோகத்தர்களால் வருடாந்தம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 10 ஊழியர்களால் ஆண்டின் போது 264 சம்பளமற்ற விடுமுறைகள் பெறப்பட்டிருந்ததுடன் அந்த விடுமுறைகளை பெற்றுக்கொள்வதற்குரிய காரணங்களைக் கண்டறிந்து விடுமுறைகளைக் குறைப்பதற்கு முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 06 கள தொழிலாளர்களுக்கு மீளாய்வாண்டிற்குரிய எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்கள் 2018 மார்ச் 16 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) உத்தியோகத்தர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 88,750 தொகையான ஊழியர் கடன் மீதி ஒன்று 2016 ஆம் ஆண்டு செப்தெம்பர் 15 ஆந் திகதி முதல் அறவிடப்படாது காணப்பட்டது.

### 3.3 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

(அ) புதிய சந்தைத் தொகுதியின் தரை மாடியில் இலக்கம் 20 மற்றும் 21 என்ற இரண்டு கடைகளும், முதலாவது மாடியின் இலக்கம் 21, 21, 22 மற்றும் 24 என்ற நான்கு கடைகளும் வாடகைக்கு வழங்கப்படாதிருந்ததுடன் தரை மாடியின் இரண்டு கடைகளினதும் மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் 2013 ஆம் ஆண்டு முதல் 2017 திசெம்பர் வரையான காலத்தில் இழக்கப்பட்ட வருமானம் ரூபா 198,000 ஆகும். முதலாவது மாடியின் நான்கு கடைகள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வேகே உப அலுவலகத்திற்குரிய இலக்கம் 02, 04 மற்றும் 05 என்ற மீன் கடைகள் 2013 ஆம் ஆண்டு முதல் குத்தகை அடிப்படையிலோ அல்லது வாடகை அடிப்படையிலோ வழங்கப்படாமையினால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரியதாக இழக்கப்பட்ட வருமானம் ரூபா 5,567,679 ஆகும்.

(இ) வீட்டுத் திட்டங்களின் தரச் சான்றிதழ் விநியோகித்தல் மந்த நிலையில் காணப்பட்டது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 நிலையான சொத்துக்கள் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படாமை

பேணிச் செல்லப்படுகின்ற நிலையான சொத்துப் பதிவேடுகளில் வருடாந்த கொள்வனவு, நன்கொடைப் பெறுவனவுகள், புதிய மூலதனமாக்கல் என்பன உள்ளடக்கப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.2 வருடாந்த பொருள் / இருப்பு மெய்மையாய்வு

(அ) கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்படுகின்ற சொத்துக்கள் வருடாந்த மெய்யாய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

| | உப அலுவலகம் | சொத்துக்களின் எண்ணிக்கை | பெறுமதி |
|---|---|---|---|
| | | | ரூபா |
| (i) | வேகே | 03 | 109,352,354 |
| (ii) | பூகொடை | 02 | 73,337,508 |
| (iii) | தொம்பே | 09 | 12,518,707 |

(ஆ) பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் தொம்பே உப அலுவலகத்தில் 78 பிளாஸ்ரிக் கதிரைகள் பற்றாக்குறையாகக் காணப்பட்டது.

#### 3.4.3 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

உள்ளூராட்சி அமைச்சின் மூலம் சபையின் வேண்டுதல் இன்றி வழங்கப்பட்ட 423 கல்வனைஸ் குழாய்கள் பழைய பிரதான அலுவலகக் கட்டத்தில் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது.

### 3.5 இனங்காணப்பட்ட நட்டம்

(அ) 2016 ஆம் ஆண்டு முதல் நான்கு மீன் விற்பனைக் கடைகளுக்காக சபையினால் நீர் மற்றும் மின்சாரம் வழங்கியதற்காக நிலையான கட்டணம் ஒன்று செலுத்தப்பட்ட போதும், அந்த மீன் கடைகள் மீன் விற்பனைக்காக வாடகைக்கு வழங்குவதற்கோ

அல்லது வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கோ கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் முன்னைய இரண்டு வருடங்களுக்கான நிலையான கட்டணமாக நீருக்காக ரூபா 33,202 தொகையும், மின்சாரத்திற்காக ரூபா 22,040 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) சியனே சௌந்தர்ய நிறுவனம் 2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் எந்தவொரு நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்படாமல் நீர்க் கட்டணம் மற்றும் மின்சாரப் பட்டியல்களுக்காக நிலையான கட்டணம் செலுத்தி பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன் நீர்ப் பட்டியல்களுக்காக இரண்டு வருடங்களுக்கு ரூபா 6,955 தொகையும், மின்சாரப் பட்டியல்களுக்காக ரூபா 4,983 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

## 3.6 பெறுகைகள்

### பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான பிரதான பெறுகைகள் திட்டம் மற்றும் வருடாந்த விரிவான திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

2017 ஆம் ஆண்டின் பாதீடு செய்யப்பட்ட நிதியேற்பாடான ரூபா 16,280,000 தொகை எதிர்பார்த்த பணிகளை மேற்கொள்ளாமையினால் அல்லது தேவையற்று இருந்தமையினால் மொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) வருமான நிர்வாகம் | (i) ஆதனவரி மற்றும் கடை வாடகை மதிப்பீடு செய்யப்படாமை. |
| | (ii) ஆதனவரி சதவீதம் திருத்தம் செய்யப்படாமை |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) பாதீடு நடைமுறைக்குப் பொருந்தும் வகையில் தயாரிக்கப்படாமை. |
| | (ii) முறையான பிரகாரம் செலவின விடயங்களுக்கிடையே நிதி மாற்றப்படாமை |
| (இ) சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) சொத்துக்களைக் கொள்வனவு செய்யும் போதும், விநியோகிக்கும் போதும் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாமை |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | பௌதீக ரீதியில் காணப்படாத சொத்துக்கள் கணக்குகளில் இருந்து அகற்றப்படாமை |
| | | (iii) | சொத்துக்களின் உரித்தை உறுதிப்படுத்துவதற்காக உரித்துறுதி அல்லது கையளித்தல் கட்டளை பெற்றுக்கொள்ளப்படாமை |
| | | (iv) | பொருட் பதிவேடு பேணிச் செல்லப்படாமை |
| (ஈ) | கழிவுப்பொருள் முகாமைத்துவம் | (i) | கழிவுப்பொருள் வரி அல்லது கட்டணம் அறவிடப்படாமை. |
| | | (ii) | கழிவுப்பொருட்களை வகைப்படுத்தப்பட்டு பெறப்படாமை |
| | | (iii) | கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக ஏற்படுகின்ற செலவினங்கள் குறைக்கப்படாமை |